வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 02.07.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கான பயணத்தின் முதல் கட்டமாக, இன்று கானா சென்றுள்ளார்.

வேலை வாய்ப்புகளை மையமாகக் கொண்ட அரசுக் கொள்கையின் வெளிப்பாடே, வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டம் என்று, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, நாளை அரியானா மாநிலம் மானேசரில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு இடையிலான தேசிய மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

சிவகங்கை மாவட்டம் அஜித்குமார் மரண வழக்கை சிபிஐ விசாரணைக்கு ஒப்படைக்க, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மோடி-வெளிநாடு-1 (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கான பயணத்தின்

முதல் கட்டமாக இன்று கானா-விற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். அவர் கானா-விற்கு **இருதரப்பு பயணம்** மேற்கொள்வது இதுவே முதன் முறையாகும். **தெற்குலகில்** இந்தியாவின் மதிப்பு வாய்ந்த கூட்டாளி நாடு, கானா என்றும் **ஆப்பிரிக்க யூனியன்** உள்ளிட்ட அமைப்புகளில் கானா முக்கிய பங்காற்றி வருவதாகவும், **புறப்பாட்டுச் செய்தியில்** பிரதமர் கூறி உள்ளார். பிரதமரின் கானா பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்........

(வாய்ஸ்)

மோடி-வெளிநாடு

(வாய்ஸ்)

கானா தலைநகர் **அக்ராவில்** இன்று மாலை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்படுகிறது. தொடர்ந்து கானா அதிபர் திரு **ஜான் மஹாமா-**வை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்துவது குறித்து விவாதிக்கிறார். **அக்ரா** நகரில் இந்திய உதவியுடன் கட்டப்பட்டுள்ள **ஜூப்ளி ஹவுஸ்- அதிபர் மாளிகையில்,** உயர்நிலைப் பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளன. பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு, வேளாண்மை, டிஜிட்டல் உள்கட்டமைப்பு, மற்றும், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கான **பிராந்திய தடுப்பூசி மையம்** ஒன்றை அமைப்பது குறித்து, இப்பேச்சு வார்த்தைகளில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்தியாவிற்கும் கானாவிற்கும் இடையே, கலாச்சார பரிமாற்றம், ஆயுர்வேத ஒத்துழைப்பு

மற்றும் கூட்டுக் கமிஷனை மீண்டும் அமைப்பது குறித்து, பல்வேறு உடன்பாடுகளும் கையெழுத்தாக உள்ளன. கானா அதிபர் இன்று இரவு பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அரசு முறை விருந்தளிக்கிறார்.

கானா-வுடன் இந்தியாவின் நீண்ட கால உறவுகளை வெளிப்படுத்தும் வகையிலும், தெற்குலக நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டும் வகையிலும், பிரதமரின் கானா பயணம் அமைகிறது.

*மோடி-அடுத்த கட்டம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி 5 நாடுகள் பயணத்தின் 2-ஆம் கட்டமாக நாளை, கானாவில் இருந்து, டிரினிடாட்-டொபாகோ செல்கிறார். இருநாடுகளுக்கும் இடையே பன்னெடுங் காலமாக நிலவும் உறவுகளை புதுப்பித்துக் கொள்ளும் வாய்ப்பாக, இந்த 2 நாள் பயணம் அமைய உள்ளது.

டிரினிடாட்-டொபாகோவில் இருந்து, பிரதமர் திரு நரேந்திர மோடி அர்ஜென்டினா செல்கிறார். லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் முக்கிய கூட்டாளியாகவும், ஜி-20 கூட்டமைப்பில் நெருங்கிய ஒத்துழைப்பு நாடாகவும் அர்ஜென்டினா திகழ்கிறது. கடந்த 57 ஆண்டுகளில், இந்தியப் பிரதமர் ஒருவர் அர்ஜென்டினா-விற்கு இருதரப்பு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். அதற்கடுத்த கட்டங்களில் பிரதமர்

மேற்கொள்ளும் பயணங்கள் குறித்து கூடுதல் விவரங்கள் ............

(வாய்ஸ்)

மோடி-அடுத்த கட்டம்

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி, அர்ஜென்டினாவில் இருந்து பிரேசில் சென்று, வரும் 6,7 ஆகிய தேதிகளில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார். மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, உலகத் தலைவர்கள் பலரையும் அவர் சந்திக்கிறார். வளரும் நாடுகளுக்கு இடையே, ஒத்துழைப்பிற்கான முக்கிய மேடையாக பிரிக்ஸ் கூட்டமைப்பு திகழ்வதையும், நீதி, சமத்துவம், ஜனநாயகம் மற்றும் அமைதியுடன் கூடிய, பலதரப்பு உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்க, இந்தியாவும்-பிரேசிலும் ஒருங்கிணைந்து பாடுபட்டு வருவதையும், பிரதமர் திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டி உள்ளார்.

5 நாடுகள் பயணத்தின் இறுதி கட்டமாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசிலில் இருந்து, நமீபியா செல்ல இருக்கிறார். இந்தியாவும் நமீபியாவும், காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்ட வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்றும், தெற்குப் பெருவுலகின் பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையில், மக்கள் நன்மைக்கான ஒத்துழைப்பை

மேம்படுத்த, முக்கிய வாய்ப்பாக தமது நமீபியப் பயணம் அமையும் என்றும் பிரதமர் கூறி உள்ளார்.

*மாண்டவியா*

**வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ்,** அடுத்த 4 ஆண்டுகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கும் புதிதாக வேலையில் சேரும் இளைஞர்களுக்கும் மொத்தம் **1 லட்சம் கோடி ரூபாய்** வழங்கப்படும் என, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசிய அவர் புதிய திட்டத்தின் கீழ், முதல் முறையாக வேலையில் சேரும் ஒவ்வொரு இளைஞருக்கும், ஆண்டுக்கு இருமுறை, தலா 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்றார். **வேலை வாய்ப்புகளை மையமாகக் கொண்ட அரசுக் கொள்கையின்** விளைவே, **வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டம்** என்று அமைச்சர் குறிப்பிட்டார். இளைஞர்கள் அனைவருக்கும் வேலை கிடைப்பதை உறுதிப்படுத்த, 5 ஆண்டுகளுக்கான திட்டம் ஒன்றை பிரதமர் திரு நரேந்திர மோடி உருவாக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

*அமர்நாத் யாத்திரை*

இவ்வாண்டு அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் முதலாவது யாத்திரிகர் குழுவினர் இன்று அதிகாலை ஜம்முவில் இருந்து புறப்பட்டு,

இன்று பிற்பகல் காஷ்மீர் வந்து சேர்ந்துள்ளனர். தெற்கு காஷ்மீரில் **காஜிகுண்ட்** அருகில் உள்ள **நவயுக்** சுரங்கப் பாதையில் உயர்நிலை காவல் துறை அதிகாரிகள், இவர்களை வரவேற்றனர். காஷ்மீர் பகுதியில், 12 ஆயிரத்து 750 அடி உயரத்தில் இமயமலையில் அமைந்துள்ள அமர்நாத் குகை கோவிலுக்கான 38 நாள் யாத்திரை, முறைப்படி நாளை தொடங்குகிறது. இவ்வாண்டு அமர்நாத் யாத்திரையை பாதுகாப்பான முறையில் சுமுகமாக நடத்த, கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*ஓம் பிர்லா*

மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா நாளை அரியானா மாநிலம் மானேசரில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு இடையிலான தேசிய மாநாட்டை தொடக்கி வைக்கிறார். மானேசர் சர்வதேச மோட்டார் வாகன தொழில் நுட்ப மையத்தில் நடைபெற உள்ள இந்த 2 நாள் மாநாட்டில், அரசியல் சாசன ரீதியில் **ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு** என்பது குறித்து விவாதங்கள் இடம் பெறும். நாட்டில் நகரமயம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நல்ல நடைமுறைகளின் பகிர்வு மற்றும் புதுமையான அணுகுமுறைகள் மூலம், நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் உட்பட அனைத்து ஜனநாயக

அமைப்புகளையும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*அஜித்குமார்-வழக்கு*

சிவகங்கை மாவட்டம் அஜித்குமார் காவல் நிலைய மரண வழக்கை **சிபிஐ விசாரணைக்கு** ஒப்படைக்க தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். நம்பகமான, வெளிப்படையான விசாரணைகளை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். **சிபி-சிஐடி** மூலம் தற்போது நடைபெற்று வரும் விசாரணைகள் தொடரலாம் என சென்னை உயர்நீதிமன்றம் கூறி உள்ள நிலையில், மாநில அரசின் முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டி, **சிபிஐ விசாரணை** மூலம் **கூடுதல் தெளிவு** கிடைக்கும் என தாம் நம்புவதாகக் கூறியுள்ளார். அஜித்குமாரின் தாயார் மற்றும் சகோதரரை, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சம்பவம் குறித்து வருத்தம் வெளியிட்டார்.

*அன்பில் மகேஷ்*

தமிழகத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என, மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார். திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற, தலைமை

ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் பேசுகையில், அவர் இதைத் தெரிவித்தார். மாநில கல்விக் கொள்கை தொடர்பான விவரங்கள், விரைவில் வெளியிடப்படும் என்றும், இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்கள், இதர மாவட்டங்களிலும், தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

*ரயில்வே*

தெற்கு ரயில்வேயின் திருச்சிராப்பள்ளி கோட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பிரிவுகளில் பராமரிப்பு பணிகள் காரணமாக,குறிப்பிட்ட நாட்களில், ரயில் சேவைகளுக்கான கால அட்டவணை, திருத்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி

வரும் 5, 8 ஆகிய தேதிகளில்,

தாம்பரம்-விழுப்புரம் மெமு பாசஞ்சர் ரயில், தாம்பரத்திற்கும்-முண்டியம்பாக்கத்திற்கும் இடையில் இயக்கப்படும்.

விழுப்புரம்-சென்னை கடற்கரை மெமு பாசஞ்சர் ரயில், விழுப்புரத்திற்கு பதிலாக, முண்டியம்பாக்கத்தில் இருந்து புறப்படும்.

விழுப்புரம்-மயிலாடுதுறை மெமு பாசஞ்சர் ரயில், விழுப்புரத்தில் இருந்து 30 நிமிடம் தாமதமாக, பிற்பகல் 3.05-க்கு புறப்படும்.

வரும் **5,6,7 ஆகிய தேதிகளில்**, சென்னை எழும்பூரில் இருந்து திருச்சி செல்லும் **சோழன் எக்ஸ்பிரஸ்**, பாதி வழியில், சவுகரியமான ஒரு இடத்தில் 30 நிமிடங்களுக்கும்,

வரும் 8-ஆம் தேதி சென்னை எழும்பூரில் இருந்து புதுச்சேரிக்கு வரும் **மெமு பாசஞ்சர் ரயில்**, பாதி வழியில், சவுகரியமான ஒரு இடத்தில் 10 நிமிடங்களுக்கும், நிறுத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக வரும் 8-ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் Barwood உள்ளிட்ட இடங்களில், 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

பெர்மிங்ஹாமில் இன்று தொடங்கி உள்ள, ஆண்டர்சன்-டெண்டுல்கர் கோப்பைக்கான 2-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணியால் முதலில் ஆட பணிக்கப்பட்ட இந்திய அணி, பகல் உணவு இடைவேளை வரை, 2 விக்கெட் இழப்பிற்கு, 98 ரன் எடுத்து இருந்தது. இந்திய அணியில், **ஜஸ்பிரித் பும்ரா**-விற்கு ஓய்வளிக்கப்பட்டு **ஆகாஷ் தீப்** சேர்க்கப்பட்டுள்ளார். **வாஷிங்டன் சுந்தர்**,

நிதிஷ்குமார் ரெட்டி ஆகியோரும், இந்திய அணியில் இடம் பெற்றுள்ளனர். 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் தற்போது, 1-க்கு பூஜ்யம் என்ற கணக்கில், இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

கொரோ□ா தடுப்பூசி

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும், எய்ம்ஸ் மருத்துவமனையும் இணைந்து மேற்கொண்ட விரிவான ஆய்வுகளில், கொரோனா தடுப்பூசிக்கும், கொரோனா காலத்திற்கு பின்னர் சிலர் திடீரென இறந்து போனதற்கும் எந்த தொடர்பும் இல்லை என உறுதியாக தெரிய வந்துள்ளது. ஏற்கனவே உள்ள உடல்நலப் பிரச்சனைகள், தவறான வாழ்க்கை முறை மற்றும் மரபணு காரணங்களால் திடீர் மாரடைப்பு மூலம் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்றும், இந்தியாவின் கொரோனா தடுப்பூசிகள் முற்றிலும் பாதுகாப்பானவை என்றும், இந்த ஆய்வுகளின் அடிப்படையில் மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொரோனா தடுப்பூசிகளை, திடீர் மரணங்களுடன் இணைத்துப் பேசுவது, அறிவியல் ஆதாரமற்ற, தவறான கருத்து என்று அறிவியல் வல்லுனர்களும் கூறி உள்ளனர்.

டெல்லி-மரபு

டெல்லி ஷாலிமார்பாக் பகுதியில் நகர வளர்ச்சி குழுமத்தால் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ள கண்ணாடி மாளிகை உள்ளிட்ட பாரம்பரிய மரபுச் சின்னங்களை, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர

சிங் ஷெகாவத் இன்று திறந்து வைத்தார். ஷாலிமார்பாக் தோட்டம் விரைவிலேயே தேசிய தலைநகரின் இருதய துடிப்பாக திகழும் என அவர் தமது உரையில் கூறினார். டெல்லி துணை நிலை ஆளுநர் திரு விகே சக்சேனா, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர், விழாவில் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கான பயணத்தின் முதல் கட்டமாக, இன்று கானா சென்றுள்ளார்.

வேலை வாய்ப்புகளை மையமாகக் கொண்ட **அரசுக் கொள்கையின்** வெளிப்பாடே, **வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டம்** என்று, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

மக்களவைத் தலைவர் **திரு ஓம் பிர்லா**, நாளை அரியானா மாநிலம் **மானேசரில்**, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு இடையிலான தேசிய மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

சிவகங்கை மாவட்டம் அஜித்குமார் மரண வழக்கை **சிபிஐ விசாரணைக்கு** ஒப்படைக்க, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/02.07.2025/Script.

------------------------